University of Jaffna, Sri Lanka
Faculty of Management Studies and Commerce

# PROCEEDINGS

# 6th International Conference on Contemporary Management 2021

## Issues and Challenges of Sustainable Development: Fostering Resolutions towards Economic Resilience

29th - 30th April 2021

ISSN 2783-8773

Academic Partner
emerald PUBLISHING

# ICCM-2021

# PROCEEDINGS

# 6th International Conference on Contemporary Management

**"Issues and Challenges of Sustainable Development: Fostering Resolutions towards Economic Resilience"**

29th & 30th April, 2021

Faculty of Management Studies and Commerce
University of Jaffna,
Sri Lanka

©Copy Right : 2021 Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka.

Published by : Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka.

URL : https://iccm.maco.jfn.ac.lk

e-mail : iccm2021@maco.jfn.ac.lk

T.P : +94 (0)21 222 3610

Printers : Guru Printers, Thirunelvely, Jaffna, Sri Lanka.

ISSN : 2783-8773

**Disclaimer:**

The contents of the full papers included in the publication proceedings remain with respective authors.

# உயர்தர வகுப்பு மாணவர்களின் செய்திப் பத்திரிகை வாசிப்பு மீதான ஈடுபாடு: தெரிவு செய்யப்பட்ட வலிகாமம் வலயத்திற்குட்பட்ட 1AB தர பாடசாலைகளை மையப்படுத்திய ஆய்வு

**சிவதர்சினி பரஞ்சோதி, சிவசுப்பிரமணியம் ரகுராம்**

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*

செய்திப் பத்திரிகை மக்களிற்கு அன்றாடச் செய்திகளைக்கொண்டு சேர்க்கும் ஊடகமாகவும், சிறந்த வாசிப்பு ஊடகமாகவும் அமைகின்ற சந்தர்ப்பங்கள் ஏனைய ஊடகங்களை விட அதிகமாகவுள்ளது. ஆனால், ஏனைய ஊடகங்களின் வளர்ச்சி யினால் இன்று செய்திப் பத்திரிகைகள் மீதான ஈடுபாடு பொதுவில் குறைந்து இருப்பதாகக் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறான சூழலில், வாசிப்பில் செய்திப் பத்திரிகைகளின் தாக்கத்தை, வாசிப்பில் அதிகம் ஆர்வம்காட்ட வேண்டிய நிலையிலுள்ள மாணவர்கள் மத்தியில், ஊடக நுகர்வு நோக்கில் கண்டறியும் வண்ணம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில், யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் வலயத்தை மையப்படுத்தி உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் மற்றும் தெல்லிப்பளை ஆகிய கோட்டங்களிற்குட்பட்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரி, வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் மகாஜனக் கல்லூரி ஆகிய நகர, கிராமப்புற 1AB தரப் பாடசாலைகள் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டு அளவை ஆய்வு முறையியல் வழியாக அவதானிப்பு, செயற்பாட்டு ஆய்வு, நேர்காணல்கள் ஆகிய ஆய்வுக்கருவிகளின் துணையுடன் சேகரிக்கப்பட்ட எண்சார் மற்றும் பெறுதிசார் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் அச்சு ஊடகங்களைக் காட்டிலும் புதிய ஊடகங்களில் வழியான வாசிப்பிலேயே அதிக அக்கறைகாட்டுகின்றனர், செய்திப் பத்திரிகைகளோடு ஒப்பிடும்போது பாடநூல்கள் மற்றும் கதைப் புத்தகங்கள் ஆகிய அச்சு ஊடகங்களையே உயர்தர வகுப்பு மாணவர்கள் வாசிப்பதற்காக அதிகளவில் பயன்படுத்துகின்றனர் ஆகிய முடிவுகள் பெறப்பட்டதோடு, செய்திப் பத்திரிகைகளை இணையவழியாக வாசிப்பதிலேயே மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டுவதும் தெரியவந்தது. அதேவேளை, உயர்தர வகுப்பு மாணவர்கள் தமது செய்திப்பத்திரிகை வாசிப்பை அரசியல் விடயங்களைத் தெரிந்துகொள்ள அதிகம் பயன்படுத்துவதும், பொழுதுபோக்கு சார்ந்த விடயங்கள், விளையாட்டுச் செய்திகள், கல்வி சார்ந்த விடயங்கள், விளம்பரங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல், ஆக்கத்திறனை வளர்த்துக்கொள்ளல் ஆகிய நோக்கங்கள் அவர்கள் வாசிப்பின் அடுத்தடுத்த இலக்குகளாக அமையப்பெறுவதும் ஆய்வின்வழி உறுதிப்படுத்தப்பட்டது. உயர்தர வகுப்பு மாணவர்களில் கணித, விஞ்ஞான, வர்த்தக மற்றும் தொழில்நுட்பப் பாடப் பிரிவுகளை விட கலைப் பிரிவு மாணவர்களே செய்திப் பத்திரிகை வாசிப்பில் அதிக நாட்டம் காட்டுவதும் ஆய்வாளரால் கண்டறியப்பட்டது. மேலும், உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் செய்திப் பத்திரிகை தொடர்பான வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கக் கூடிய புறக்காரணிகள் மற்றும் கல்விசார் நடவடிக்கைகள் பாடசாலைகளில் போதியளவு முன்னெடுக்கப்படாதுள்ளமையும், பாடசாலைகளில் வாசிப்பை ஊக்குவிக்கும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கின்றமையும் அவதானிக்கப்பட்டது.

**திறவுச்சொற்கள்:** *உயர்தர வகுப்பு மாணவர்கள்; அச்சு ஊடகங்கள்; செய்திப் பத்திரிகை; வாசிப்புப் பழக்கம்*

# உயர்தர வகுப்பு மாணவர்களின் செய்திப் பத்திரிகை வாசிப்பு மீதான ஈடுபாடு: தெரிவு செய்யப்பட்ட வலிகாமம் வலயத்திற்குட்பட்ட 1AB தர பாடசாலைகளை மையப்படுத்திய ஆய்வு

**சிவதர்சினி பரஞ்சோதி[1], சிவசுப்பிரமணியம் ரகுராம்[2]**

[1]ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

[2]ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

sivatharsiny02@gmail.com[1], ragunadu2003@yahoo.com[2]

## ஆய்வுச் சுருக்கம்

செய்திப் பத்திரிகை ஓர் பாரம்பரிய ஊடகமாகும். அதன் ஆரம்ப காலம் தொட்டு மக்கள் மத்தியில் செய்திப் பத்திரிகையின் செல்வாக்கு அதிகம். மக்கள் அன்றாடச் செய்திகளை அறிந்துகொள்ளப் பெரிதும் செய்திப் பத்திரிகைகளையே நம்பியிருக்கின்றனர். அதேவேளை, செய்திப் பத்திரிகைகள் சிறந்த வாசிப்பு ஊடகமாக அமைகின்ற சந்தர்ப்பங்களும் ஏனைய ஊடகங்களை விட அதிகமாகவுள்ளது. ஆனால், ஏனைய ஊடகங்களின் வளர்ச்சியினால் இன்று செய்திப் பத்திரிகைகள் மீதான ஈடுபாடு பொதுவில் குறைந்து இருப்பதாகக் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறான சூழலில், வாசிப்பில் செய்திப் பத்திரிகைகளின் தாக்கத்தை, வாசிப்பில் அதிகம் ஆர்வம்காட்ட வேண்டிய நிலையிலுள்ள மாணவர்கள் மத்தியில், ஊடக நுகர்வு நோக்கில் கண்டறியும்வண்ணம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில், யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் வலயத்தை மையப்படுத்தி உடுவில் கோட்டத்திற்குட்பட்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சங்கானைக் கோட்டத்திற்குட்பட்ட வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சண்டிலிப்பாய்க் கோட்டத்திற்குட்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் தெல்லிப்பளைக் கோட்டத்திற்குட்பட்ட மகாஜனக் கல்லூரி ஆகிய நகர, கிராமப்புற 1AB தரப் பாடசாலைகள் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டு அளவை ஆய்வு முறையியல் வழியாக அவதானிப்பு, செயற்பாட்டு ஆய்வு, நேர்காணல்கள் ஆகிய ஆய்வுக்கருவிகளின் துணையுடன் தகவல்கள் திரட்டப்பட்டன. பெறப்பட்ட எண்சார் மற்றும் பெறுதிசார் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் அச்சு ஊடகங்களைக் காட்டிலும் புதிய ஊடகங்களில் வழியான வாசிப்பிலேயே அதிக அக்கறைகாட்டுகின்றனர், செய்திப் பத்திரிகைகளோடு ஒப்பிடும்போது பாடநூல்கள் மற்றும் கதைப் புத்தகங்கள் ஆகிய அச்சு ஊடகங்களையே உயர்தர வகுப்பு மாணவர்கள் வாசிப்பதற்காக அதிகளவில் பயன்படுத்துகின்றனர் ஆகிய முடிவுகள் பெறப்பட்டதோடு, செய்திப் பத்திரிகைகளை இணையவழியாக வாசிப்பதிலேயே மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டுவதும் தெரியவந்தது. அதேவேளை, உயர்தர வகுப்பு மாணவர்கள் தமது செய்திப்பத்திரிகை வாசிப்பை அரசியல் விடயங்களைத் தெரிந்துகொள்ள அதிகம் பயன்படுத்துவதும், பொழுதுபோக்கு சார்ந்த விடயங்களை அறிந்து கொள்ளுதல், விளையாட்டுச் செய்திகள், கல்வி சார்ந்த விடயங்கள், விளம்பரங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல், ஆக்கத்திறனை வளர்த்துக்கொள்ளல் ஆகிய நோக்கங்கள் அவர்கள் வாசிப்பின் அடுத்தடுத்த இலக்குகளாக அமையப்பெறுவதும் ஆய்வின்வழி உறுதிப்படுத்தப்பட்டது.

உயர்தர வகுப்பு மாணவர்களில் கணித, விஞ்ஞான, வர்த்தக மற்றும் தொழில்நுட்பப் பிரிவு பாடப் பிரிவுகளை விட கலைப் பிரிவு மாணவர்களே செய்திப் பத்திரிகை வாசிப்பில் அதிக நாட்டம் காட்டுவதும் ஆய்வாளரால் கண்டறியப்பட்டது. மேலும், உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் செய்திப் பத்திரிகை தொடர்பான வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கக் கூடிய புறக்காரணிகள் மற்றும் கல்விசார் நடவடிக்கைகள் பாடசாலைகளில் போதியளவு முன்னெடுக்கப்படாதுள்ளது ஓர் முக்கிய குறைபாடாகக் காணப்படுவதும், பாடசாலைகளில் வாசிப்பை ஊக்குவிக்கும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கின்றமையும் அவதானிக்கப்பட்டது.

**திறவுச்சொற்கள்: உயர்தர வகுப்பு மாணவர்கள், அச்சு ஊடகங்கள், செய்திப் பத்திரிகை, வாசிப்புப் பழக்கம்**

## 01. அறிமுகம்

வெகுசன ஊடகங்களில் தமிழ்ச் சமூகத்தின் மிக முக்கியமான வாசிப்புச் சாதனமாகக் கருதப்படுவது செய்திப் பத்திரிகைகளாகும். நாட்டு நடப்புக்களை மட்டும் செய்திப் பத்திரிகைகள் தருவதில்லை. மாணவர்களின் கல்வி சார்ந்த வெளியீடுகளையும் தருகின்றன. அதாவது, மாணவரின் பாட விதானம் சார்ந்த தகவல்களையும், ஆய்வு முயற்சிகளுக்கும் உதவுகின்ற பலதரப்பட்ட பொருட்துறைகள் சார்ந்த கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகளையும் உள்ளடக்கும் தகவல் வளமாகவே செய்திப் பத்திரிகைகள் காணப்படுகின்றன. அந்தவகையில் மாணவர்கள் தமது வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்திக்கொள்ள செய்திப் பத்திரிகைகள் வழிகாட்டிகளாக இருந்து வருகின்றன.

வாசிப்பு என்பது ஆளுமை விருத்திக்கான வழிகளில் ஒன்றாகும். மக்கள் ஏதோவொரு வகையில் தகவல்களைப் பெறுவதற்கு ஊடகங்களைப் பயன்படுத்துகின்றார்கள். அதாவது, தங்களிற்கேற்ற விடயங்களை அவற்றுக்குரிய ஊடகங்களிலிருந்து வாசித்துப் பெற்றுக்கொள்கின்றார்கள். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ஏதோவொரு வகையில் வாசிப்பில் ஈடுபடுகின்றார்கள்.[1] இவ்வாசிப்பானது ஒரு மனிதனைப் பூரணப்படுத்தும் ஒரு செயற்பாடாக விளங்குகின்றது.

செய்திப் பத்திரிகை ஒரு பாரம்பரிய ஊடகமாக விளங்குவதால் அதன் ஆரம்ப காலம் தொட்டு மக்கள் மத்தியில் அதன் செல்வாக்கு அதிகமாகவுள்ளது. மக்கள் அன்றாடச் செய்திகளை அறிந்துகொள்ளப் பெரிதும் செய்திப் பத்திரிகைகளையே நம்பியிருக்கின்றனர். இந்நிலையில் செய்திப் பத்திரிகை சிறந்த வாசிப்பு ஊடகமாக இருக்கின்ற சந்தர்ப்பங்கள் ஏனைய ஊடகங்களை விட அதிகம் என்றே கொள்ளமுடியும்.

ஆனால், இன்று புதிய ஊடகங்களின் பாவனை அதிகரித்த நிலையில் செய்திப் பத்திரிகைகள் வாசிப்பு தொடர்ந்து தக்கவைக்கப்பட்டிருக்கின்றதா என்ற கேள்வி அனைவரதும் மனதில் எழுகின்ற ஒன்றாகிவிட்டது. செய்திப் பத்திரிகை மீதான ஈடுபாடு பொதுவில் குறைந்து இருப்பது பொதுவில் அவதானிக்கப்படுகின்றது. குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் முன்னர் போன்று செய்திப்பத்திரிகை வாசிப்பில் ஈடுபாடு காட்டுவதில்லை என்பது பலராலும் எடுத்துக்காட்டப்படுகின்றது. இவ்வாறான சூழலில் வாசிப்பில் அதிகம் ஆர்வம்காட்ட வேண்டிய நிலையிலுள்ள மாணவர்கள் மத்தியில், ஊடக நுகர்வு நோக்கில் கண்டறியும்வண்ணம் செய்திப் பத்திரிகை வாசிப்பு எந்தளவு தூரம் உள்ளது என்பதை ஆராய வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

---

[1] இராசரத்தினம், வடகோவை பூ.க. (2009, ஐப்பசி). வாசித்தலைக் கைப்பற்ற வேண்டுமே தவிர கற்பிக்க முடியாது, அகவிழி, கொழும்பு : சேமமடு பதிப்பகம், ப. 35.

## 02. முன்னைய ஆய்வுகள் மீதான பார்வை

2014ஆம் ஆண்டில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணிப் பட்டப்படிப்பிற்காக மு. நிருஜாவினால் ஆய்வு செய்யப்பட்ட, "யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் பேசும் மாணவர்களின் பத்திரிகை வாசிப்பு"[2] எனும் ஆய்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் பேசும் மாணவர்கள் மட்டத்தில் தகவல்களைப் பெறுவதிலும், கல்விச் செயற்பாட்டிற்கும் பத்திரிகையின் பங்களிப்பு எவ்வாறு இருக்கின்றது, மாணவர்களின் மட்டத்தில் பத்திரிகை வாசிப்புப் பழக்கம் எவ்வாறு காணப்படுகின்றது ஆகிய விடயங்கள் பண்புசார் ஆய்வு வழியாகக் கண்டறியப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியற்றுறை பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறியின் இறுதிப் பரீட்சையின் பகுதித் தேவையினைப் பூர்த்தி செய்யும் முகமாக திருமதி. ரதினி உதயணனால் ஆய்வு செய்யப்பட்ட, "மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் பெற்றோர் ஆசிரியர்களின் பங்களிப்பு"[3] எனும் ஆய்வில் மாணவர்களின் வாசிப்பும், ஆர்வமும், அவர்களின் நிலையும் அவற்றில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் விவரணரீதியான ஆய்வுவழியாக விளக்கப்பட்டுள்ளன.

2008ஆம் ஆண்டில் முதுகலைமாணிப்பட்ட ஆய்விற்காக ஹேர்மன் வொல்ஸ்விங்கேல் (Herman Wolswinkel) என்பவரால் ஆய்வு செய்யப்பட்டு, ருவன்ற் பல்கலைக்கழகத்திற்குச் (University of Twente) சமர்ப்பிக்கப்பட்ட, "இளைஞர்களிடையே பத்திரிகை வாசிப்புப் பழக்கம்"[4] எனும் ஆய்வில் பத்திரிகை வாசிப்பில் தாக்கம் செலுத்தும் காரணிகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

ஜோன் ரெய்லர் (John Taylor) என்பவரால், "பாடசாலை, பழக்கம், அணுகுமுறைகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு வாசிப்பை இளைய தலைமுறை வாசித்தல்"[5] எனும் ஆய்வு ஒடாகோப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப்பட்ட நிறைவில் 2010ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது. இவ் ஆய்வு இளைஞர்களிடையே பாரம்பரிய மற்றும் இலத்திரனியல்

---

[2] நிருஜா,மு. (2014). யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் பேசும் மாணவர்களின் பத்திரிகை வாசிப்பு, இளங்கலைமாணிப்பட்ட நிறைவுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பதிப்பிக்கப்படாத ஆய்வேடு, ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

[3] ரதினி,உ. (2017). பாடசாலை மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்களின் பங்களிப்பு, பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறியின் நிறைவுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அச்சிடப்படாத ஆய்வேடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

[4] Wolswinkel,H. (2008). Newspaper Reading Behavior of Young Adults, Thesis Submitted for Master. Availableat:http://scholar.google.com/scholar?cluster=15575379119799282156&&hl=en&as_sdt=0,5&sciodt=0,5#d=gs-qabs&u=%23p%3D7CmsncncJtgJ (Accessed on 09/10/2018, 20:45).

[5] Taylor,J.F. (2010). Teenage Personal Reading beyond the School, Habits, Attitudes and Beliefs, Thesis Submitted for Master of Arts. Available at: http://hdl.handle.net/10523/4256 (Accessed on 13/10/2018, 21:55).

வாசிப்பு ஆகிய இரண்டு விடயங்களைப்பற்றி ஆராய்கின்றது. இவ் ஆய்வு வாசிப்பைச் சுற்றியுள்ள வாசகர்களின் அணுகுமுறைகளையும், நம்பிக்கைகளையும் விசாரித்து மாறிவரும் தன்மை குறித்த அவர்களின் கருத்துக்களை ஆராய்ந்துள்ளது.

உதவிப் பேராசிரியராகிய ஏ.கே.எம் எமின் அலி அகண்டா (A.K.M. Eamin Ali Akanda) மற்றும் விரிவுரையாளரான எம்டி. அர்மனுல் ஹக் (MD. Armanul Haque) ஆகிய இருவரினாலும் "பங்களாதேஷ் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்களின் பத்திரிகை வாசிப்புப் பழக்கம்"[6] எனும் தலைப்பில் 2013ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக் கட்டுரை பங்களாதேஷ் நாட்டிலுள்ள ராஜ்ஷாகி பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவர்களின் செய்தித்தாள் வாசிப்புப் பற்றிய மதிப்பீட்டில் கவனம் செலுத்தியுள்ளது.

படாருதீன் சோம்ரோ (Badaruddin Soomro) மற்றும் மசூக் அலி க்ஹோவாஜா (Mashooq Ali Khowaja) ஆகியோரால் பாகிஸ்தானின் "சிந்து பிரதேசப் பல்கலைக்கழக மாணவர்களின் வாசிப்புப் பழக்கம்"[7] எனும் தலைப்பில் 2012இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு சிந்து பிரதேசப் பல்கலைக்கழக மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் தொடர்பான மதிப்பீட்டில் கவனம் செலுத்தியுள்ளது. மாணவர்கள் எவ்வாறு பத்திரிகையினை வாசிக்கின்றனர் அதிலும் குறிப்பாக எப்பகுதிகளை வாசிக்க விரும்புகின்றனர் என்பது குறிப்பாக இந்த ஆய்வின்வழி கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவின் காஷ்மீர் பல்கலைக்கழகத்தின் (University of Hashmir) ஆவணப்படுத்தல் அதிகாரி பயஸ் அகமட் லோன் (Fayaz Ahmad Loan) எனும் ஆய்வாளரால் "கல்லூரி மாணவர்களின் வாசிப்பு மற்றும் நூலகப் பாவனை"[8] என்னும் தலைப்பில் 2011ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது இருபத்தியோராம் நூற்றாண்டில் கல்லூரி மாணவர்களிடையே காணப்படும் வாசிப்புத் தொடர்பான மனப்பாங்கு, வாசிப்பதற்குச் செலவிடும் காலம், வாசிப்பதற்குப் பொருத்தமான இடம், ஆர்வமுள்ள பாடப் பரப்பு, மொழித் தெரிவு, பாவனை

[6] Eamin Ali Akanda, A.K.M, Armanul Haque, MD. (2013). Newspaper Reading Habits of University Graduate Students in Bangladesh, Impact Journals, Vol.1,Issue.3, pp.1-8. Available at: http://www.researchgate.net/publication/321874006-NEWSPAPER-READING-HABITS-OF UNIVERSITY-GRADUATE-STUDENTS-IN-BANGALADESH-A-CASE-STUDY. (Accessed on 13/10/2018, 22:18).

[7] Badaruddin Soomro, Mashooq Ali Khowaja. (2012). Reading Habits of University Students in Sindh, The Grassroots, Vol.48, No.II, pp.177-186. Available at : http://scholar.google.com/scholar?hl=en&as-sdt=0%2C5&q=reading+habits+of+university+students+in+sindh+&btnG=#d=gs_qabs&u%23p%3Dtt5xlcWuSH4J. (Accessed on 13/10/2018, 22:45).

[8] Loan,F.A. (2011). Reading and Library Usage Habits of the College Students, International Journal of Information Research, Vol.1, No.1, pp.1-13. Available at : http://scholar.google.com/scholar?hl=en&as-sdt=0%2C5&q=reading+and+Library+usage+habits+of+the+college+students+&btnG=#d=gs_qabs&u%23p%3DrXho_qSQ-AkJ. (Accessed on 13/10/2018, 23:15).

செய்யப்படும் நூலகங்கள் மற்றும் வாசிப்பு மூலங்களில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிந்துள்ளது.

பூர்ணிமா சௌகான் (Purnima Chauhan) மற்றும் கலாநிதி பயாறே லால் (Dr. Payare Lal) ஆகிய உதவி நூலகவியலாளர்களால் 2012ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட "கல்லூரி மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கம்"[9] என்ற ஆய்வுக் கட்டுரை கல்லூரி மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் தகவல் தெழில்நுட்பத்தின் தாக்கம் பற்றிய மதிப்பீட்டில் கவனம் செலுத்தியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி எஸ். ரகுராம் என்பவரால், 2016ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளிவந்த ஆசிரியம் சஞ்சிகையில் "யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாசிப்பு ஊக்குவிப்பில் ஊடகங்கள்"[10] என்னும் தலைப்பின் கீழ் எழுதப்பட்ட கட்டுரை, இன்றைய ஊடக உலகில் உருவாகி வருகின்ற புதிய போக்குகள் வாசிப்புத் தளத்தில் எவ்வாறான மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளன என்பதனை எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி செ.யோகராசா மாணவர்களுடைய வாசிப்புப் பழக்கம் சார்ந்து தன்னுடைய நீண்டகால அனுபவம்சார் அவதானிப்புக்களை 2005ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளிவந்த அகவிழி சஞ்சிகையில் "சமகால வாசிப்பு: அதிர்வுகளும் அடுத்த காலடியும்"[11] என்ற தலைப்பின் கீழ் பகிர்ந்துள்ளார். இவரது பகிர்வில் வாசிப்பின் இன்றையநிலை பற்றியும் மாணவர்கள் மத்தியில் வாசிப்புமீதான ஆர்வம் குன்றியுள்ளமைக்கான காரணங்கள் பற்றியும் பேசப்பட்டுள்ளது.

து. இராஜேந்திரம் என்பவரால், 2014ஆம் ஆண்டு வெளிவந்த போராசிரியர் மா.கருணாநிதி கல்விச்சேவைப் பாராட்டு விழா மலரில் 'வாசிப்புப் பழக்கம் வாழ்வை மேம்படுத்தும்'[12] என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட கட்டுரையில் மாணவர்களிடத்து வாசிப்பைப் பழக்கப்படுத்திக் கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் எத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றலாம் என்பது பற்றியும், அதனால் அவர்கள் பெறக்கூடிய அனுகூலங்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

---

[9]Chauhan,P, Lal,P. (2012). Imapct of Information Technology on Reading Habits of College Students, International Journal of Research Review in Engineering Science and Technology, Vol.1, Issue.1, pp.101106.Availableat:http://scholar.google.com/scholar?hl=en&as_sdt=0%2C5&q=imapct+of+information+technology+on+reading+habits+of+college+students+&btnG=#d=gs_qabs&u%23p%3D_de7sjDJwTMJ. (Accessed on 13/10/2018, 15:48).

[10] ரகுராம்,எஸ். (2016). வாசிப்பு ஊக்குவிப்பில் ஊடகங்கள், ஆசிரியம், சிபிசி பிறஸ், கொழும்பு-11,பக்.17-21.

[11]யோகராசா,செ. (2005). சமகால வாசிப்பு: அதிர்வுகளும் அடுத்த காலடியும், அகவிழி, ரெக்னோ பிறின்ட், கொழும்பு-06, பக்.6-7.

[12]இராஜேந்திரம்,து. (2014). *வாசிப்புப் பழக்கம் வாழ்வை மேம்படுத்தும்*, மா.கருணாநிதி கல்விச் சேவைப் பாராட்டு விழா மலர், கொழும்பு : குமரன் புத்தக இல்லம், பக். 97-100

வடகோவை பூ.க. இராசரத்தினம், 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளிவந்த அகவிழி சஞ்சிகையில் 'வாசித்தலைக் கைப்பற்ற வேண்டுமே தவிர கற்பிக்க முடியாது'[13] என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையில் வாசித்தலின் முக்கியத்துவம் பற்றியும், வாசிப்புப் பழக்கம் குன்றி வருவதற்கான காரணங்கள் பற்றியும், வாசிப்புக்கு ஏற்ற தளமாக அமையும் நூல்நிலையங்களின் செயற்பாடுகளினைப் பற்றியும், வாசிப்புப் பழக்கம் குறைவதற்குரிய காரணங்கள், தீர்வு நடவடிக்கைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

2014 நவம்பர் 8ஆம் திகதி 'வாசிப்பின் முக்கியத்துவமும் பிள்ளைகள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதன் அவசியமும்'[14] என்ற தலைப்பில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நூலகர் முஹம்மட் மஜீட் மஸ்றூபா ஹமீம் என்பவரால் என்ற இணையத்தளத்தில் எழுதப்பட்ட இணையத்தளக் கட்டுரையில் வாசிப்பின் நோக்கம், வாசிப்பின் முக்கியத்துவம், வாசிப்பில் ஏற்படுகின்ற பிரச்சினைகள், வாசிக்கத் தூண்டுவதற்கான தந்திரோபாயங்கள் போன்ற விடயங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது.

ஆய்வுகளைப் பொதுவில் நோக்குமிடத்து வாசிப்புப் பழக்கங்களைச் சார்ந்து அதிகம் பல்கலைக்கழகங்களினையே ஆய்வின் மூலங்களாகக் கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும், பத்திரிகைகள், சஞ்சிகைகள், மற்றும் இணையத்தளங்களிலும் வாசிப்புப் பழக்கம் சார்ந்து கட்டுரைகள் சில இடம்பெற்றதையும் அவதானிக்க முடிகின்றது. பொதுவாக இளைஞர்கள், மாணவர்கள், வயோதிபர்கள் மத்தியில் வாசிப்பு வீதம் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோதும், குறிப்பாக உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் செய்திப் பத்திரிகை வாசிப்பு மீதான ஈடுபாடு குறைந்து செல்கின்றமையை ஒட்டிய ஆய்வுகள் இதுவரை யாழ்ப்பாணப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படவில்லை, எனவே, இதுவரை தவறவிடப்பட்டிருந்த இவ் ஆய்வு வெளியை மையப்படுத்தி, உயர்தர வகுப்பு மாணவர்களை அடிப்படையாகக்கொண்டு அவர்கள் மத்தியில் செய்திப் பத்திரிகை வாசிப்புப் பழக்கம் எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிய ஆய்வாளரால் 'உயர்தர வகுப்பு மாணவர்களின் செய்திப் பத்திரிகை வாசிப்பு மீதான ஈடுபாடு' என்கின்ற தலைப்பு தெரிவுசெய்யப்பட்டது.

---

[13] இராசரத்தினம், வடகோவை பூ.க. (2009, ஐப்பசி). வாசித்தலைக் கைப்பற்ற வேண்டுமே தவிர கற்பிக்க முடியாது, அகவிழி, கொழும்பு : சேமமடு பதிப்பகம், ப. 35.

[14] முஹம்மட் மஜீட் மஸ்றூபா ஹமீம். (2014). Sri Lanka Muslims, 8 November 2014, வாசிப்பின் முக்கியத்துவமும் பிள்ளைகள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதன் அவசியமும். Available at : srilankamuslims.lk/வாசிப்பின்-முக்கியத்துவம்/ (Accessed on 10/10/2018, 20:05).

## 03. ஆய்வுப் பிரச்சினை

இன்று பெருமளவான வாசகர்கள் புதிய ஊடகங்களை நோக்கிச் செல்லும் நிலையில் செய்திப் பத்திரிகைகள் வாசிப்பு மீதான ஈடுபாடு தொடர்ந்தும் தக்கவைக்கப்பட்டிருக்கின்றதா? என்ற கேள்வி எழுகின்றது. இவ்வாறான நிலையில் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் அவ்வாறான ஒரு போக்கு நிலவுவதான தோற்றப்பாடு காணப்படுகின்றது.

வாசிப்பு மாதமான ஐப்பசி மாத காலப்பகுதிகளில் வாசிப்புசார்ந்து பல்வேறு கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. அவ்வாறு தினகரன் பத்திரிகையின் இணையப்பதிப்பில் (E-Paper) 07.10.2019 அன்று "அருகிச் செல்லும் வாசிப்புப் பழக்கம்" எனும் தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருந்த கட்டுரையில் "எழுத்துத்திறனைப் பெறுவதற்கு வாசிப்புத்திறன் அவசியம். பாடசாலையில் வாசிக்க முடியாத ஒரு பிள்ளை எழுத முடியாதவனாக இருப்பான். வாசிப்புத்திறனை ஆரம்பத்திலிருந்து விருத்தி செய்யவேண்டும். ஆரம்பத்தில் விருத்தி செய்யத் தவறினால் பிள்ளை பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும். இன்றைய நவீன உலகில் வாசிப்புத்திறன் அருகி வருகின்றது. இதனால் பொது அறிவுத் திறன் மாணவர்கள் மத்தியில் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது. இது பிள்ளைகளின் வாசிப்புத்திறனில் ஏற்பட்டுள்ள பின்னடைவைக் காட்டுகின்றது. 'ஸ்மாட்போன்' பாவனை, கணினித் தொடர்புகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வானொலி போன்ற ஊடகங்களின் செயற்பாடுகளின் காரணமாக இன்று நூல்களையும் பத்திரிகைகளையும் வாசிப்பதை அதிகமானோர் தவிர்த்து வருகின்றனர்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பாடசாலை மட்டத்திலேயே வாசிப்புப் பழக்கம் ஊக்குவிக்கப்படாமையாலும், ஆர்வம் காட்டாமையாலும் ஏனைய உயர்நிலைப் படிப்புகளிலும், பல்கலைக்கழகங்களிலும் வாசிப்புப் பழக்கம் எதிர்பார்ப்பு நிலையிலும் குறைந்து கொண்டு செல்கின்ற நிலைப்பாட்டை அவதானிக்க முடிகின்றது. செய்திப்பத்திரிகை வாசிப்பை ஊக்கப்படுத்தக்கூடிய கட்டுமானங்கள் பாடசாலைகளில் அமைக்கப்பட வேண்டும். ஆனால், அதற்குரிய வெளி பாடசாலைகளில் போதுமானதாக இல்லை என்கின்ற கருத்து பாடசாலை மாணவர்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும், நூலகர்கள் மத்தியிலும் பெரிதும் நிலவுகின்றது.

## 04. ஆய்வு வினாக்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலை செல்லும் உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் எவ்வாறு காணப்படுகின்றது?, வாசிப்பதற்காக அவர்கள் எவ்வாறான ஊடகங்களைத் தெரிவு செய்கின்றனர்?, உயர்தர வகுப்பு மாணவர்கள் செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஈடுபடுகிறார்களெனில் எத்தகைய நோக்கங்களுடன் அவர்கள் வாசிப்பில் ஈடுபடுகின்றார்கள்?, மாணவர்கள் செய்திப் பத்திரிகை வாசிப்புப் பழக்கத்திலிருந்து விலகிச்செல்வதற்கு ஏதுவாக இருக்கக்கூடிய காரணிகள் எவை?, அவர்தம் செய்திப் பத்திரிகை வாசிப்பை என்னென்ன காரணிகள் ஊக்கப்படுத்துகின்றன? ஆகிய ஆய்வு வினாக்கள் ஆய்வாளரால் முன்வைக்கப்பட்டன.

## 05. ஆய்வின் நோக்கம்

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் செய்திப் பத்திரிகை வாசிப்பு மீதான ஈடுபாடு எவ்வாறு காணப்படுகின்றது என்பதை அடையாளம் காணுதல் இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்களின் வாசிப்பு மீதான ஈடுபாடு, வாசிப்பதற்கான ஊடகத் தெரிவு, செய்திப் பத்திரிகை வாசிப்பதற்கான நோக்கங்கள், மாணவர்கள் ஆர்வம் செலுத்தும் செய்திப் பத்திரிகை உள்ளடக்கங்கள், செய்திப் பத்திரிகை வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கக்கூடிய காரணிகள், செய்திப் பத்திரிகை வாசிப்புப் பழக்கத்தைப் பாதிக்கும் காரணிகளைக் கண்டறிதல் ஆகியன இந்த ஆய்வின் துணை நோக்கங்களாக அமைந்துள்ளன.

## 06. ஆய்வின் கருதுகோள்

"உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் வாசிப்பு மீதான ஈடுபாடு குறைவாகக் காணப்படுவதுடன், அவ்வாறு குறைவான வாசிப்பிலும் சினிமா, பொழுதுபோக்குச் சார்ந்த விடயங்களையே அவர்கள் அதிகம் தெரிவுசெய்து வாசிக்கின்றார்கள். புதிய ஊடகங்களின் வருகை செய்திப் பத்திரிகை வாசிப்பைப் பாதிக்கும் முதன்மைக் காரணியாக அமைகின்றது." என்பது இந்த ஆய்வின் கருதுகோளாக முன்வைக்கப்பட்டது.

## 07. ஆய்வு முறையியல்

ஆய்வுச் செயற்பாடு ஒன்றை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல ஆய்வுமுறையியல் அவசியமானதாக அமைகின்றது. ஆய்வு முறையியல் என்பது ஆய்வானது எந்த முறையினூடாக நகர்த்திச் செல்லப்படுகின்றது என்பதே ஆகும். ஆய்வுப் பிரச்சினைகளும் தன்மைகளுமே ஆய்வு முறையியலைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆய்வில் தகவல் திரட்டும் செயற்பாடானது ஆய்வு முறையியலின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. குறித்த ஆய்வுச் செயற்பாடானது பெறுநர்சார் ஆய்வாக பின்வரும் இரு முறைகளினூடாக மேற்கொள்ளப்பட்டன.

- எண்சார் ஆய்வு
- பெறுதிசார் ஆய்வு / பண்புசார் ஆய்வு

எண்சார் ஆய்வு முறை என்பது எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு ஆய்வை முன்னெடுத்துச் செல்வதாகும். பெறுதிசார் ஆய்வானது உளப்போக்கு, பார்வை, நடத்தை, அபிப்பிராயங்கள், போக்குகள் போன்ற மானுடம் சார் உள்ளார்ந்த தன்மைகளை ஆய்வு செய்யும் முறையாகும்.

இவ்விரண்டு ஆய்வு முறையியல்களும் ஆய்வுப் பிரச்சினைகளுக்கும், தன்மைக்கும் ஏற்ப ஆய்வுகளில் இடம்பெறுவது வழக்கம். அந்தவகையில் இவ்விரு ஆய்வு முறைகளும் குறித்த ஆய்வுக்கு அவசியம் என்பதால் ஆய்வாளர் இம்முறைகளினைப் பயன்படுத்தி ஆய்வினை மேற்கொண்டார்.

அந்தவகையில், யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்கள் வாசிப்பிற்காக ஆர்வம் செலுத்தும் அச்சுப் பதிப்பு ஊடகங்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் உள்ளடக்கங்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் பாடப் பிரிவு ஆகிய விடயங்களைக் கண்டறிய எண்சார் ஆய்வு முறையும்,

உயர்தர வகுப்பு மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும், வாசிப்பிற்கான ஊடகத் தெரிவு, வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் அச்சு ஊடகங்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பு மீதான ஈடுபாடு, செய்திப் பத்திரிகை வாசிப்பதற்கான நோக்கங்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பில் மாணவர்கள் ஆர்வம் செலுத்தும் உள்ளடக்கங்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பதற்கான வாய்ப்புக்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஏற்படும் சவால்கள் ஆகியவற்றைக் காரணகாரிய அடிப்படையில் கண்டறிய பெறுதிசார் ஆய்வு முறையும் பயன்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 7.1 தரவுகள் சேகரிப்பு

### 7.1.1 முதனிலைத் தரவுகள்

ஆய்வின் முதனிலைத் தகவல் திரட்டல் வழிமுறையாக வலிகாமம் வலயத்திற்குற்பட்ட உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் மற்றும் தெல்லிப்பளை ஆகிய கல்விக்கோட்டங்களின் அடிப்படையில் உயர்தரப் பிரிவில் கலைப் பிரிவு, வர்த்தகப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு, கணிதப் பிரிவு, மற்றும் தொழில்நுட்பப் பிரிவு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய பாடசாலைகளில் (1-AB Schools) இருந்து அதிகூடிய மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகள் ஆய்வுப் பரப்பாக அமைகின்றன. அந்தவகையில் உடுவில் கோட்டத்திற்குட்பட்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சங்கானைக் கோட்டத்திற்குட்பட்ட வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சண்டிலிப்பாய்க் கோட்டத்திற்குட்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் தெல்லிப்பளைக் கோட்டத்திற்குட்பட்ட மகாஜனக் கல்லூரி ஆகிய ஒவ்வொரு பாடசாலை நூல்நிலையங்களிற்கும் தனித்தனியே குறிப்பேடுகள் வழங்கப்பட்டு, 11.02.2019 இலிருந்து 28.02.2019 வரையுள்ள இரு வார காலப் பகுதியினுள் உயர்தர வகுப்பில் கல்வி கற்கின்ற மொத்த மாணவர்களில் எத்தனைபேர் செய்திப் பத்திரிகைகள் வாசிக்கின்றார்கள், செய்திப் பத்திரிகையில் எவ்வாறான உள்ளடக்கங்களை வாசிக்கின்றனர், எப்பாடப் பிரிவினர் செய்திப் பத்திரிகை வாசிப்பில் அதிக ஆர்வம் செலுத்துகின்றனர் ஆகிய எண்சார் தரவுகளை ஆய்வாளர் திரட்டியுள்ளார்.

#### 7.1.1.1 நேர்காணல்கள்

இங்கு ஆய்வாளரால் நேரடியான நேர்காணல் மூலம் தரவுகள் பெறப்பட்டன. ஆய்வுப் பரப்பினுள் உள்ளடங்கும் ஒவ்வொரு பாடசாலை நூலகங்களிலும் பொறுப்பாக இருக்கும் நூலகர்களிடம் உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் வாசிப்பு மீதான ஈடுபாடு, வாசிப்பிற்கான ஊடகத் தெரிவு, வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் அச்சு ஊடகங்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பு மீதான ஈடுபாடு, செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் உள்ளடக்கங்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் பாடப் பிரிவு, செய்திப் பத்திரிகை வாசிப்பிற்கான வாய்ப்புக்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஏற்படும் சவால்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பை ஊக்குவிப்பதற்கான பரிந்துரைகள் ஆகிய விடயங்களை அறிந்துகொள்ளும் வகையில் வினாக்கள் ஆய்வாளரால் எழுப்பப்பட்டு தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

#### 7.1.1.2 குவிமையக் கலந்துரையாடல்கள்

ஆய்வுக்கு மேலும் வலுச்சேர்க்கும் முகமாக ஆய்வாளரால் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட உடுவில் கோட்டத்திற்குட்பட்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சங்கானைக் கோட்டத்திற்குட்பட்ட வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சண்டிலிப்பாய்க் கோட்டத்திற்குட்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் தெல்லிப்பளைக் கோட்டத்திற்குட்பட்ட மகாஜனக் கல்லூரி ஆகிய நான்கு 1-AB தரப் பாடசாலைகளில் கலைப் பிரிவு, வர்த்தகப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு, கணிதப் பிரிவு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு ஆகிய பாடப் பிரிவுகளில் கல்விகற்கின்ற உயர்தர வகுப்பு மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் இருந்து பத்து சதவீதத்தின் (10%) அடிப்படையில் மாணவர்கள் தெரியப்பட்டு, அவர்கள் மத்தியில் குவிமையக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

உயர்தர வகுப்பு மாணவர்களின் வாசிப்புப் பழக்கம், வாசிப்பிற்கான ஊடகத் தெரிவு, வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் அச்சு ஊடகங்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பதற்கான நோக்கங்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் உள்ளடக்கங்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பதற்கான வாய்ப்புக்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஏற்படும் சவால்கள், செய்திப் பத்திரிகை வாசிப்பை ஊக்குவிப்பதற்கான பரிந்துரைகள் ஆகிய விடயங்களைக் கண்டறியும் நோக்கில் குவிமையக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டன.

### 7.2 மாதிரிகள் வடிவமைப்பு

தீர்ப்பாயப்படுத்தப்பட்ட மாதிரித் தெரிவு முறையினை அடிப்படையாகக் கொண்டு மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆய்விற்குத் தெரிவான நான்கு 1-AB தரப் பாடசாலைகளில் கலைப் பிரிவு, வர்த்தகப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு, கணிதப் பிரிவு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு ஆகிய பாடப் பிரிவுகளில் கல்விகற்கின்ற உயர்தர வகுப்பு மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் இருந்து பத்து சதவீதத்தின் (10%) அடிப்படையில் மாணவர்கள் தெரியப்பட்டனர். இந்தவகையில், உடுவில் கோட்டத்திற்குட்பட்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 314 ஆக அமையுமிடத்து அவர்களிலிலிருந்து 31 மாணவர்களும், சங்கானைக் கோட்டத்திற்குட்பட்ட வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 497 ஆக அமையுமிடத்து அவர்களிலிலிருந்து 50 மாணவர்களும், சண்டிலிப்பாய்க் கோட்டத்திற்குட்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 288 ஆக அமையுமிடத்து அவர்களிலிலிருந்து 29 மாணவர்களும், தெல்லிப்பளைக் கோட்டத்திற்குட்பட்ட மகாஜனக் கல்லூரியின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 630 ஆக அமையுமிடத்து அவர்களிலிலிருந்து 63 மாணவர்களும் ஆய்வாளரால் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டன.

ஆய்விற்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளின் நூலகர்கள் பாடசாலைக்குத் தலா ஒருவராக, நான்கு பேரும் நேர்காணலுக்காகத் தெரிவுசெய்யப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டன.

## 08. தரவுப் பகுப்பாய்வும் ஆய்வு முடிவுகளும்


ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்துப் பாடசாலை நூலகங்களிற்கும் தனித்தனியான குறிப்பேடுகளை வழங்கப்பட்டுப் பெறப்பட்ட எண்சார் தரவுகளை அடிப்படையாகக்கொண்டும், நேர்காணல்கள் மற்றும் குவிமையக் கலந்துரையாடல்கள் மூலம் பெறப்பட்ட பெறுதிசார் தரவுகளை அடிப்படையாகக் கொண்டும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

### 8.1 உயர்தர வகுப்பு மாணவர்கள் வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் அச்சு ஊடகங்கள்

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கின்ற உயர்தர வகுப்பு மாணவர்கள் வாசிப்புக்காக ஆர்வம் செலுத்தும் அச்சு ஊடகங்களை அறிந்து கொள்வதற்காக ஆய்வாளரால் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட உடுவில் கோட்டத்திற்குட்பட்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரி (314 மாணவர்கள்), சங்கானைக் கோட்டத்திற்குட்பட்ட வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி (497 மாணவர்கள்), சண்டிலிப்பாய்க் கோட்டத்திற்குட்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி (288 மாணவர்கள்) மற்றும் தெல்லிப்பளைக் கோட்டத்திற்குட்பட்ட மகாஜனக் கல்லூரி (630 மாணவர்கள்) என நான்கு பாடசாலைகளிலும் உயர்தர வகுப்பில் கல்வி கற்கின்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் (1729 மாணவர்கள்) 749 மாணவர்களை நூறு வீதமாகக்கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அச்சு ஊடகங்கள் என்ற வகைப்பாட்டினுள் செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், பாடப் புத்தகங்கள், கதைப் புத்தகங்கள் ஆகியன உள்ளடக்கப்பட்டன. பத்திரிகைகள் என்பதற்குள்

பாடசாலைகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற செய்திப் பத்திரிகைகளும், சஞ்சிகை என்பதற்குள் பாடசாலைகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற சஞ்சிகைகளும், கதைப் புத்தகங்கள் என்பதற்குள் நாவல்கள் மற்றும் சிறுகதைப் புத்தகங்கள் என்பனவும், பாடப் புத்தகங்கள் என்பதற்குள் மாணவர்களால் வாசிக்கப்படுகின்ற அனைத்துப் பாட நூல்களும் இவை தவிர்ந்த ஏனையவை என்ற வகைப்பாட்டினுள் கட்டுரை, கவிதை மற்றும் அறிவுக் களஞ்சியம் சார்ந்த நூல்கள் என்பனவும் உள்ளடக்கப்பட்டன.




**வரைபு - 01 உயர்தர வகுப்பு மாணவர்கள் வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் அச்சு ஊடகங்கள்**

மேற்காட்டப்பட்ட வரைபு 01 ஆய்விற்குட்படுத்தப்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்கள் வாசிப்பதற்காக ஆர்வம் செலுத்தும் அச்சு ஊடகங்களைக் குறிக்கின்றது. மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கின்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் (1729 மாணவர்கள்) 749 மாணவர்களே அச்சு ஊடகங்களை வாசிப்பதற்காகப் பயன்படுத்தியுள்ளனர். இதனடிப்படையில் ஒப்பீட்டு ரீதியில் 32 சதவீதமான மாணவர்கள் கதைப் புத்தகங்களையும், 29 சதவீதமான மாணவர்கள் பத்திரிகைகளினையும், 23 சதவீதமான மாணவர்கள் கட்டுரைகள், கவிதைகள் மற்றும் அறிவுக் களஞ்சியம் சார்ந்த ஏனைய நூல்களையும், 8 சதவீதமான குறைந்தளவிலான மாணவர்கள் சஞ்சிகைகள் மற்றும் பாடப் புத்தகங்களையும் வாசித்தனர்.

ஆய்வாளரால் ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளது நூலகப் பொறுப்பாசிரியர்கள் மத்தியில் உயர்தர வகுப்பு மாணவர்கள் வாசிப்பில் ஆர்வம் செலுத்தும்

அச்சுப் பதிப்பு ஊடகங்கள் தொடர்பில் பதிலளித்தவர்கள்[15] - "உயர்தர வகுப்பு மாணவர்களின் அதிகளவிலான நேரம் பாடசாலைகளைச் சார்ந்தும் தனியார் வகுப்புக்களைச் சார்ந்துமே அதிகம் செலவிடப்படுகின்றது. இவ்வாறான சூழலில் மாணவர்கள் அதிகம் தமது பாடப் புத்தகங்களைச் சார்ந்த வாசிப்பிலேயே ஈடுபடுகின்றார்கள். அவை தவிர, நூலகங்களைப் பயன்படுத்தும்வேளையில் கதைப் புத்தகங்களையே அதிகம் விரும்பி வாசிக்கின்றனர். தமது பாடவிதான செயற்பாடுகளிற்குத் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் பத்திரிகைகள், பொது அறிவுசார் விடயங்கள், கட்டுரைகள் மற்றும் அறிவுக் களஞ்சியங்கள் ஆகியவற்றை வாசிக்கின்றார்கள்" எனத் தெரிவித்தனர்.

மேலும், மாணவர்கள் மத்தியில் இடம்பெற்ற குவிமையக் கலந்துரையாடலின்போது, கற்றல் செயற்பாடுகள் சார்ந்து அதிகளவிலான நேரத்தை மாணவர்கள் பாடசாலையிலேயே செலவிடுவதால், அவ்வாறான நிலையில் பாடப் புத்தகங்களையே அதிகம் வாசிக்கின்றனர், வீடுகளில் படிக்கும்போதும் பாடப் புத்தகங்களையே வாசிக்கின்றனர். அவர்களுடைய பாடசாலைகளில் கொள்வனவு செய்யப்படுகின்ற பத்திரிகைகளின் தெரிவு குறைவாக இருப்பதுடன் அப்பத்திரிகைகளும் கூடுதலான நேரங்கள் ஆசிரியர்களின் கைகளிலேயே இருப்பதால் மாணவர்கள் அவற்றை வாசிக்க முடியாதிருக்கின்றது. இதனால் நூலகங்களுக்குச் செல்கின்றபோது கதைப் புத்தகங்கள், பொது அறிவுசார் நூல்கள் போன்ற வேறு பல நூல்களை வாசிக்க நேரிடுகின்றது எனத் தெரியவந்தது.


## 8.2 செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் உள்ளடக்கங்கள்

உயர்தர வகுப்பு மாணவர்கள் செய்திப் பத்திரிகைகளில் எவ்வாறான உள்ளடக்கங்களை வாசிப்பதில் ஆர்வம் செலுத்துகின்றார்கள் என்பதைக் கண்டறிவதற்காக ஆய்வாளரால் ஆய்வின் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஈடுபட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கையை (213 மாணவர்கள்) 100 சதவீதமாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

செய்திப் பத்திரிகை உள்ளடக்கங்கள் என்பதற்குள் அரசியல், பொருளாதாரம், விளையாட்டு, சினிமா, இலக்கியம், கல்விசார் விடயங்கள் மற்றும் ஏனையவை ஆகியன உள்ளடக்கப்பட்டன. பொருளாதாரம் என்பதற்குள் நாணயமாற்று வீதங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பங்குச்சந்தை நிலவரங்கள் ஆகிய விடயங்களும், இலக்கியம் என்பதற்குள் சிறுகதை, தொடர்கதை மற்றும் கவிதை ஆகிய விடயங்களும், கல்வி சார்ந்த தகவல்கள் என்பதற்குள் பொது அறிவு, வினாவிடைகள், பேச்சு ஆங்கிலம் மற்றும் நுண்ணறிவு ஆகிய விடயங்களும், ஏனையவை என்பதற்குள் விளம்பரங்கள், வேலைவாய்ப்புகள் பற்றிய தகவல்கள், அழகுக் குறிப்புக்கள், சமையற் குறிப்புக்கள், மருத்துவம் சார்ந்த தகவல்கள் மற்றும் மரண அறிவித்தல்கள் ஆகிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப்பகுப்பாய்வில் செய்திப் பத்திரிகைகளின் அனைத்து உள்ளடக்கங்களையும் வாசித்த

[15] பவானி, நி. நூலகப் பொறுப்பாசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய், நேர்காணல்: 01.03.2019, நேரம்: 11.15.

மாதிரிகளின் எண்ணிக்கைகள் ஒவ்வொரு வகை உள்ளடக்கங்களிற்குள்ளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.




**வரைபு – 02 செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் உள்ளடக்கங்கள்**

மேற்காட்டப்பட்ட வரைபு 02 ஆய்வின் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் கல்விகற்கின்ற உயர்தர வகுப்பு மாணவர்கள் செய்திப் பத்திரிகைகளில் எவ்வாறான உள்ளடக்கங்களை வாசிப்பதில் ஆர்வம் செலுத்துகின்றார்கள் என்பதைக் குறித்து நிற்கின்றது. இதனடிப்படையில் ஒப்பீட்டு ரீதியில் அதிகளவிலான மாணவர்கள் (41 சதவீதம்) அரசியல் சார்ந்த தகவல்களையும், 21 சதவீதமான மாணவர்கள் விளையாட்டு சார்ந்த தகவல்களையும், 11 சதவீதமான மாணவர்கள் விளம்பரங்கள், வேலைவாய்ப்புக்கள், அழகுக் குறிப்புக்கள், சமையற் குறிப்புக்கள், மருத்துவம் சார்ந்த தகவல்கள் மற்றும் மரண அறிவித்தல்கள் ஆகிய தகவல்களையும், 10 சதவீதமான மாணவர்கள் சினிமா சார்ந்த தகவல்களையும், 8 சதவீதமான மாணவர்கள் இலக்கியம் சார்ந்த தகவல்களையும், 6 சதவீதமான மாணவர்கள் கல்வி சார்ந்த தகவல்களையும், 3 சதவீதமான குறைந்தளவிலான மாணவர்கள் பொருளாதாரம் சார் தகவல்களையும் வாசித்தனர்.

ஆய்வாளரால் ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளது நூலகப் பொறுப்பாசிரியர்கள் மத்தியில் உயர்தர வகுப்பு மாணவர்கள் செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் உள்ளடக்கங்கள் தொடர்பில் பதிலளித்தவர்கள்[16] - “உயர்தர வகுப்பு மாணவர்களில் அதிகமானோர் அரசியல், விளையாட்டுச் செய்திகளை வாசிப்பதிலேயே அதிக


[16]மாதங்கி, மோ. நூலக உதவியாளர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை, நேர்காணல்: 06.03.2019, நேரம்: 10.30.

நாட்டம் காட்டுகின்றனர். ஏனையோர் சினிமா, சிறுகதைகள், தொடர் கதைகள் ஆகிய பொழுதுபோக்கு சார்ந்த விடயங்களை வாசிக்கின்றனர்” எனத் தெரிவித்தனர்.

மேலும், மாணவர்கள் மத்தியில் இடம்பெற்ற குவிமையக் கலந்துரையாடலின்போது, பாடசாலைகளில் பாடங்கள் சார்ந்து வழங்கப்படுகின்ற ஒப்படைச் செயற்பாடுகளுக்காகப் பத்திரிகைகளில் வெளிவருகின்ற அரசியல் செய்திகள், விளம்பரங்கள், சினிமாசார் தகவல்கள், ஆசிரியர் தலையங்கங்கள் போன்றவற்றை அதிகம் வாசிப்பதாகவும், அதுதவிர, விளையாட்டில் அதிக ஆர்வம் இருப்பதனால் விளையாட்டுச் செய்திகளையும் அதிகம் வாசிப்பதாகவும் பெரும்பாலான மாணவர்கள் தெரிவித்தனர்.

## 8.3 செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் பாடப் பிரிவு

ஆய்வாளரால் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு உயர்தர வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொரு பாடப் பிரிவினரும் செய்திப் பத்திரிகை வாசிப்பில் எவ்வாறான ஆர்வத்தைக் கொண்டுள்ளனர் என்பதனைக் கண்டறிவதற்காக ஆய்வின் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஈடுபட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கையை (213 மாணவர்கள்) 100 சதவீதமாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. கல்விப் பிரிவு என்பதற்குள் கலைப் பிரிவு, வர்த்தகப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு மற்றும் கணிதப் பிரிவு என்பன உள்ளடக்கப்பட்டன.




**வரிப்படம் – 03 செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் பாடப் பிரிவு**

மேற்காட்டப்பட்ட வரிப்படம் 03, ஆய்வாளரால் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் உயர்தர வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொரு பாடப் பிரிவினரும் செய்திப் பத்திரிகை வாசிப்பில் எவ்வாறான ஆர்வத்தைக் கொண்டுள்ளனர் என்பதைக் குறித்து நிற்கின்றது. இதனடிப்படையில், ஒப்பீட்டுரீதியில் செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஈடுபட்ட மொத்த மாணவர்களில் (213 மாணவர்கள்) கலைப் பிரிவில் அதிகளவிலான மாணவர்களும் (எண்ணிக்கை - 138), தொழில்நுட்பப் பிரிவில் 34 மாணவர்களும், வர்த்தகப் பிரிவில் 22 மாணவர்களும், கணிதப் பிரிவில் 15 மாணவர்களும், விஞ்ஞானப் பிரிவில் எண்ணிக்கையில் குறைந்தளவிலாக 4 மாணவர்களும் செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஈடுபட்டனர்.

ஆய்வாளரால் ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளது நூலகப் பொறுப்பாசிரியர்கள் மத்தியில் உயர்தர வகுப்பு மாணவர்கள் செய்திப் பத்திரிகை வாசிப்பில் ஆர்வம் செலுத்தும் பாடப் பிரிவு தொடர்பில் பதிலளித்தவர்கள்[17] - “உயர்தர வகுப்பு மாணவர்களில் கலைப் பிரிவு மாணவர்களே செய்திப் பத்திரிகைகளை அதிகம் வாசிக்கின்றார்கள். கலைப் பிரிவில் ஊடகக் கற்கைகள், அரசியல் விஞ்ஞானம், தமிழ், மனையியல் போன்ற பாடங்கள் இருப்பதனால் அவர்கள் தமது பாட விதானச் செயற்பாடுகள் சார்ந்து பத்திரிகைகளை வாசிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. விஞ்ஞான, கணிதப், வர்த்தகப் பிரிவுகளைச் சேர்ந்த சில மாணவர்கள் தினக்குரல் பத்திரிகையில் வெளிவருகின்ற கல்விக்குரல் இணைப்பிதழைப் பெற்று வாசிப்பதை அவதானிக்க முடிகின்றது” எனத் தெரிவித்தனர்.

அதேவேளை, உயர்தர வகுப்பு மாணவர்களிற்கென நூலகப் பாடவேளைகள் ஒதுக்கப்பட்டிருப்பினும், அப்பாடவேளைகளில் கலைப் பிரிவு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களே செய்திப் பத்திரிகை வாசிப்பில் அதிகம் ஈடுபடுவதாகவும் நூலகப் பொறுப்பாசிரியர்களால்[18] தெரிவிக்கப்பட்டது.

## 8.4 உயர்தர வகுப்பு மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும்

ஆய்வாளரால் ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளது நூலகப் பொறுப்பாசிரியர்கள் மத்தியில் உயர்தர வகுப்பு மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் தொடர்பில் பதிலளித்தவர்கள்[19] - “இன்றைய காலகட்டத்தில் வாசிப்பு என்பது மாணவர்கள் மத்தியில் ஆர்வம்குறைந்த ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. பாடசாலைகளில் நூலகங்கள் இருந்தாலும் மாணவர்கள் அவற்றைத் தகுந்தவாறு பயன்படுத்துவது மிகக் குறைந்த அளவிலேயே ஆகும். இதற்கு முக்கிய காரணம், பாடசாலை இயங்குகின்ற நேரமாகும்.

---

[17] பவானி, நி. நூலகப் பொறுப்பாசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய், நேர்காணல்: 01.03.2019, நேரம்: 11.15.

[18] கேதீஸ்வரி, ஜீ. நூலகப் பொறுப்பாசிரியர், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சித்தன்கேணி, நேர்காணல்: 01.03.2019, நேரம்: 09.30.

[19] பவானி, நி. நூலகப் பொறுப்பாசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய், நேர்காணல்: 01.03.2019, நேரம்: 11.15.

பாடசாலைகளில் நூலகப் பாட நேரம் ஒதுக்கப்பட்டுள்ளபோதும் அது சரியான முறையில் மாணவர்களால் பயன்படுத்தப்படுவதில்லை" எனத் தெரிவித்தனர்.

அதேவேளை, "இன்றைய காலகட்டத்தில் வாசிப்பு தொழில்நுட்ப ரீதியில் பல மாற்றங்களைப் பெற்றுள்ளது. வாசிப்பிற்கான தகவல் மூலங்களை மாணவர்கள் இலகுவில் பெற்றுக் கொள்கின்றார்கள். இதனால் அச்சுப் பதிப்புக்கள் மூலமான வாசிப்பு இன்று வேறு பரிமாணத்தைப் பெற்றுள்ளது. அதன் மூலமான மாணவர்களின் வாசிப்பும் வேறுநிலையை அடைந்துள்ளதே தவிர, மாணவர்கள் மத்தியில் ஒட்டுமொத்தமாக வாசிப்புக் குறைந்துவிட்டது என்று கூறி விடவும் முடியாது. ஏதோவொரு வகையில் மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் காணப்படுகின்றது" எனவும் நூலகப் பொறுப்பாசிரியர்களால்[20] தெரிவிக்கப்பட்டது.

மேலும், மாணவர்கள் மத்தியில் இடம்பெற்ற குவிமையக் கலந்துரையாடலின்போது, அனைத்து மாணவர்களும் ஏதோவொருவகையில் தங்களது தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்காக அச்சு ஊடகங்கள் தவிர்ந்த மாற்று ஊடகங்கள் வழியாக வாசிப்பில் ஈடுபடுவதும் உறுதிப்படுத்தப்பட்டது..

## 8.5 உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் வாசிப்பிற்கான ஊடகத் தெரிவு

ஆய்வாளரால் ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளது நூலகப் பொறுப்பாசிரியர்களில் உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் வாசிப்பிற்கான ஊடகத் தெரிவு தொடர்பில் பதிலளித்தவர்கள்[21] - "நூலகங்களையும் வாசிகசாலைகளையும் நம்பியிருந்த வாசிப்பு இன்று அவற்றையெல்லாம் கடந்து பல தெரிவுகளைக் கொண்டு காணப்படுகின்றது. தகவல் தொழில்நுட்பப் புரட்சி வாசிப்பினைப் பல பரிமாணங்களுக்கு இட்டுச் சென்றுள்ளது. இந்நிலையில், மாணவர்கள் மத்தியில் பல்பரிமாணங்களைக் கொண்ட வாசிப்புப் பழக்கம் ஏற்படுத்தப்பட்டு புதிய ஊடகங்கள் சார்ந்த வாசிப்புப் பழக்கமும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. உயர்தர வகுப்பு மாணவர்கள் பாட விதானச் செயற்பாடுகள் சார்ந்து நூல்கள், செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றை இலகுவாகவும் விரைவாகவும் இணையம் மூலம் பெற்று வாசிக்கின்றார்கள" என்றனர்.

"தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ளும் சூழலை இணையம் உருவாக்கியுள்ளது. இன்று அதிகளவிலான உயர்தர வகுப்பு மாணவர்கள் முகநூல்கள் (Facebook) மற்றும் இணையத்தளங்கள் மூலமாக அதிகளவிலான தகவல்களைப் பெற்று வாசிக்கின்றனர். வாசிப்பது மட்டுமல்லாமல், அதனுடன் பங்கு கொள்கின்றார்கள். எவ்வாறிருப்பினும் நூல்கள், பத்திரிகைகள் போன்றவற்றினை நேரடியாகக் கையில் வைத்து வாசிப்பதன் மூலம்

---

[20] கேதீஸ்வரி, ஜீ. நூலகப் பொறுப்பாசிரியர், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சித்தன்கேணி, நேர்காணல்: 01.03.2019, நேரம்: 09.30.

[21] வானதி, ப. நூலகப் பொறுப்பாசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, உடுவில், நேர்காணல்: 28.02.2019, நேரம்: 11.30.

மாணவர்களுக்கு ஏற்படும் திறன் இணைய வாசிப்புடன் ஒப்பிடுகையில் கூடுதலாக இருக்கின்றது" எனவும் நூலகப் பொறுப்பாசிரியர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, "கிராமப்புறப் பாடசாலைகளில் வறுமைப்பட்ட பிள்ளைகளே அதிகம் கல்வி கற்கின்றார்கள். இவ்வாறான நிலையில் புதிய ஊடகங்களைக் காட்டிலும் அச்சுப் பதிப்பு ஊடகங்களை மாணவர்கள் அதிகம் வாசிப்புக்காகப் பயன்படுத்துகின்றனர்" எனவும் நூலகப் பொறுப்பாசிரியரொருவரால்[22] தெரிவிக்கப்பட்டது.

மேலும், மாணவர்கள் மத்தியில் இடம்பெற்ற குவிமையக் கலந்துரையாடலின்போது, நூலகப் பாடவேளைகளில் செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் புத்தகங்கள் ஆகியவற்றையும் பிரதான பாடவேளைகளில் பாடப் புத்தகங்களையுமே அதிகம் வாசிப்பதாகவும், வீட்டில் இருக்கும்போது திறன்பேசிகளை அதிகம் பயன்படுத்துவதால் அதில் முகநூல்கள், இணையத்தளங்கள் வாயிலாக அதிகளவிலான தகவல்களைத் தேடிப்பெற்று வாசிப்பதாகவும், முகநூல்களில் தாம் வாசிப்பது மட்டுமல்லாது தம்முடைய பதிவுகளையும் உடனுக்குடன் பதிவிடுவதாகவும், இணையத்திலேயே இன்று அனைத்துப் பத்திரிகைத் தகவல்களையும் உடனுக்குடன் வேண்டிய நேரத்தில் பெற்று வாசிக்கக்கூடியதாக இருப்பதால் தாம் அச்சு ஊடகங்களை நாடித்தான் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்கின்ற அவசியம் இல்லை எனக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட பெரும்பாலான மாணவர்களால் தெரிவிக்கப்பட்டது.

## 8.6 உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் இணையவழிச் செய்திப் பத்திரிகை வாசிப்பு மீதான ஈடுபாடு

ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளது நூலகப் பொறுப்பாசிரியர்களில் உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் செய்திப் பத்திரிகை வாசிப்பு மீதான ஈடுபாடு தொடர்பில் பதிலளித்தவர்கள்[23] - "உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் செய்திப் பத்திரிகை வாசிப்பு மீதான ஈடுபாடு காணப்படுகின்றது. ஆனால், செய்திப் பத்திரிகையை விட விரைவாகவும், இலகுவாகவும் கிடைக்கக்கூடிய தன்மையை இணையவழிப் பத்திரிகைகள் கொண்டிருப்பதால், அவ் இணையவழிப் பத்திரிகையை வாசிப்பதிலேயே மாணவர்கள் அதிக ஆர்வம்காட்டி வருகின்றனர்" எனத் தெரிவித்தனர்.

---

[22] கேதீஸ்வரி, ஜீ. நூலகப் பொறுப்பாசிரியர், வட்டு இந்துக் கல்லூரி, சித்தன்கேணி, நேர்காணல்: 01.03.2019, நேரம்: 09.30.

[23] வானதி, ப. நூலகப் பொறுப்பாசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, உடுவில், நேர்காணல்: 28.02.2019, நேரம்: 11.30.

## 8.7 உயர்தர வகுப்பு மாணவர்கள் செய்திப் பத்திரிகை வாசிப்பதற்கான நோக்கங்கள்

ஆய்வுக்கான மாதிரிகளாக எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்துப் பாடசாலைகளையும் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் செய்திப் பத்திரிகை வாசிப்பதற்கான நோக்கங்கள் தொடர்பில் பதிலளித்தவர்கள், அன்றாடம் வெளிவருகின்ற நாட்டுநடப்புக்களை அறிந்துகொள்வதற்காகவும், பொழுதுபோக்குச் சார்ந்து பல தகவல்கள் செய்திப் பத்திரிகைகளில் வெளிவருவதால் அவற்றை வாசிப்பதற்காகவும், விளையாட்டுச் செய்திகளை அறிந்து கொள்ளவும், விளம்பரங்களைக் கவனத்திற்கொள்ளவும் பத்திரிகைகளை வாசிப்பதாகவும், அதுமட்டுமல்லாமல் பாடசாலைகளில் பத்திரிகைகள் சார்ந்து தருகின்ற ஒப்படைகளைச் செய்வதற்காகவும், பத்திரிகைகளிற்கு தங்களது ஆக்கங்களை எழுதி அனுப்புவதற்காகவும், அவற்றைத் தேடி வாசிப்பதற்காகவும், தமது ஆக்கத்திறனை மேலும் வளர்த்துக்கொள்ளவும் பத்திரிகைகளை வாசிப்பதாகவும் தெரிவித்தனர்.

## 8.8 செய்திப் பத்திரிகை வாசிப்பதற்கான வாய்ப்புக்கள்

ஆய்வாளரால் ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளது நூலகப் பொறுப்பாசிரியர்கள் மத்தியில் உயர்தர வகுப்பு மாணவர்களின் செய்திப் பத்திரிகை வாசிப்பதற்காக இருக்கக்கூடிய வாய்ப்புக்கள் தொடர்பில் பதிலளித்தவர்கள்[24] - "பாடசாலைகளில் உயர்தர வகுப்பு அனைத்துப் பாடப் பிரிவினருக்கும் நூலகப் பாடவேளை ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு வாரத்தில் இரண்டு பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அப்பாடவேளைகளில் மாணவர்கள் செய்திப் பத்திரிகை வாசிப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வாசிப்பு மாதமாகிய ஒக்டோபர் மாதத்தில் மாணவர்களின் வாசிப்புத்திறனை வெளிப்படுத்தும் வகையில் பல போட்டிகள் இடம்பெறுகின்றன" எனத் தெரிவித்தனர்.

அதேவேளை, பாடசாலையில் மதிய இடைவேளை நேரமும், பாடசாலை முடிவடைந்த பின்னர் ஒரு மணி நேரமும் மாணவர்களுடைய வாசிப்பிற்கென மேலதிகமாக ஒதுக்கப்படுகின்றது. அவ்வேளைகளிலும் மாணவர்கள் பத்திரிகைகளை வாசிப்பதற்குரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சில பாடங்களை கற்கின்ற மாணவர்களுக்கு பத்திரிகைகளை அடிப்படையாகக்கொண்ட ஒப்படைச் செயற்பாடுகள் வழங்கப்படுகின்றன. அதன் நிமித்தமும் மாணவர்கள் செய்திப் பத்திரிகைகளை வாசிக்கின்றார்கள்" என நூலகப் பொறுப்பாசிரியர்களால்[25] தெரிவிக்கப்பட்டது.

மேலும், மாணவர்கள் மத்தியில் இடம்பெற்ற குவிமையக் கலந்துரையாடலின்போது, பாடசாலைகளில் வாசிப்பதற்காக நூலகப் பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும்,

---

[24] பவானி, நி. நூலகப் பொறுப்பாசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய், நேர்காணல்: 01.03.2019, நேரம்: 11.15.

[25] வானதி, ப. நூலகப் பொறுப்பாசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, உடுவில், நேர்காணல்: 28.02.2019, நேரம்: 11.30.

அப்பாடவேளைகளில் பாடச் செயற்பாடுகள் சார்ந்து ஒப்படைகள் வழங்கப்படுவதால் செய்திப் பத்திரிகைகளை வாசித்தல் மற்றும் வாசிப்பு மாதங்களில் இடம்பெறும் போட்டிகளுக்குத் தம்மைத் தயார்செய்து கொள்வதற்காக செய்திப் பத்திரிகைகளினை வாசித்தல் ஆகியன பாடசாலைகளில் செய்திப் பத்திரிகைகளை வாசிப்பதற்கான வாய்ப்புக்களாக அமைவதாகக் குறிப்பிட்ட மாணவர்கள், பாடசாலைகள் தவிர்ந்து வேறு பிராந்திய நூலகங்களிலும், வாசிகசாலைகளிலும், வீடுகளிலும் குறைந்தளவிலான மாணவர்கள் பத்திரிகைகளை வாசிப்பதாகவும் தெரிவித்தனர்.

## 8.9 செய்திப் பத்திரிகை வாசிப்பில் எதிர்நோக்கப்படும் சவால்கள்

ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளது நூலகப் பொறுப்பாசிரியர்கள் மத்தியில் உயர்தர வகுப்பு மாணவர்கள் செய்திப் பத்திரிகை வாசிப்பில் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் தொடர்பில் பதிலளித்தவர்கள்[26] - “அனைத்துப் பாடப் பிரிவினருக்கும் நூலகப் பாடவேளை ஒதுக்கப்படுகின்ற போதும் சில பாடப் பிரிவினர் அப்பாடவேளைகளில் வகுப்பறையில் தமது கற்றல் செயற்பாடுகளிலேயே ஈடுபடுகின்றனர். சில மாணவர்கள் பத்திரிகைகளை வாசிக்கின்றபோதும் அவற்றில் அவர்களுடைய கல்விச் செயற்பாடுகள் சார்ந்த விடயங்கள் குறைவாக இடம்பெற்றிருப்பதால் அவற்றை வாசிப்பதிலிருந்து இடைவிலகுகின்றார்கள். வாசிப்பு மாதத்தில் வாசிப்பை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகள் இடம்பெறுகின்றபோதும் பத்திரிகை வாசிப்பைத் தனித்தே ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை. இன்று மாணவர்கள் அனைவரும் திறன்பேசியிலேயே அதிக நேரத்தை செலவிடுகின்றனர். அதில் இணையம் போன்றவற்றில் அதிக தகவல்களைப் பெற்று வாசிக்கின்றனர். இவ்வாறான நிலையில் செய்திப் பத்திரிகை வாசிப்பு என்பது அக மற்றும் புறக் காரணிகள் சார்ந்து மாணவர்களுக்குச் சவாலாகவே உள்ளது” எனத் தெரிவித்தனர்.

அதேவேளை, தமது பாடசாலை ஒரு கிராமப்புறப் பாடசாலை எனவும், அங்கு பத்திரிகைக்குரிய தெரிவு குறைவாக இருப்பதுடன், அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் பத்திரிகைகளும் ஆசிரியர்களின் கைகளிலேயே அதிகம் இருக்கும். இதனால் மாணவர்களின் கைகளிற்குப் பத்திரிகைகள் செல்வது மிகவும் குறைவு. இதனால் மாணவர்கள் கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் போன்றவற்றையே வாசிக்கின்றனர். இது மாணவர்கள் பத்திரிகை வாசிப்பதற்குத் தடையாக உள்ளது எனவும், தமது பரீட்சைக்குத் தயாராகுவதிலேயே அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். இவ்வாறான நிலையில் பத்திரிகைகளை நாடாது பரீட்சை வினாத்தாள்களையும், பாடப் புத்தகங்களையும்,

---

[26] பவானி, நி. நூலகப் பொறுப்பாசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய், நேர்காணல்: 01.03.2019, நேரம்: 11.15.

ஆசிரியர்களின் பாடக் குறிப்புக்களையும் (Notes) வாசிப்பதிலேயே முனைப்போடு செயற்படுகின்றனர்" எனவும் நூலகப் பொறுப்பாசிரியர் ஒருவர் [27] தெரிவித்தனர்.

மேலும், மாணவர்கள் மத்தியில் இடம்பெற்ற குவிமையக் கலந்துரையாடலின்போது, பாடசாலைகளில் நூலகப் பாடவேளைகள் ஒதுக்கப்பட்டிருப்பினும், குறித்த பாடவேளைகளில் கல்விச் செயற்பாடுகள் இடம்பெறுவதால் பாடசாலையில் செய்திப் பத்திரிகைகள் வாசிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை எனவும், செய்திப் பத்திரிகைகளை வாசிப்பதற்கு அதிக நேரம் தேவையான நிலையில் பாடசாலை முடிவடைந்ததும் தனியார் கல்வி நிலையங்களிற்குச் செல்வதால் செய்திப் பத்திரிகைகளை வாசிப்பதற்கான சந்தர்ப்பங்கள் மிகக்குறைவு எனவும், வீட்டில் ஞாயிற்றுக்கிழமையில் ஓய்வாக இருக்கும்போது மட்டுமே பத்திரிகை வாசிப்பதாகவும், அதுவும் கூடுதலாக திறன்பேசியில் இணையம் மூலமாக அதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதால், இணையப் பத்திரிகையை வாசிப்பதாகவும், இதனால் செய்திப் பத்திரிகைகளை நாடுவது மிகவும் குறைவு எனவும் பெரும்பாலான மாணவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, இன்று செய்திப் பத்திரிகைகளில் விளம்பரங்களே அதிகம் வெளிவருவதாகவும், கல்விசார் விடயங்கள் வெளிவருவது குறைவெனவும், குறிப்பாக சில செய்திப் பத்திரிகைகள் மரண அறிவித்தல்களுக்கே அதிக பக்கங்களை ஒதுக்குகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாகவும், இவ்வாறான நிலையில் பத்திரிகைகளை தொடர்ந்து வாசிக்க முடியாத நிலை ஏற்படுவதாகவும், இன்று செய்திப் பத்திரிகைகளை விட இணையம் மூலம் மிகத்துரிதமாக எழுத்து மற்றும் காட்சிரீதியான அதிகளவிலான தகவல்களைப் பெறக் கூடியதாக இருப்பதாலும், இதனால் அச்சுப் பத்திரிகைகளை விடுத்து இணைய வழி வாசிப்பில் அதிகம் ஈடுபடுவதாகவும் மாணவர்களால் தெரிவிக்கப்பட்டது.

## 8.10 செய்திப் பத்திரிகை வாசிப்பை ஊக்குவிப்பதற்கான பரிந்துரைகள்

ஆய்வாளரால் ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளது நூலகப் பொறுப்பாசிரியர்களில் உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் செய்திப் பத்திரிகை வாசிப்பை ஊக்குவிப்பதற்கான பரிந்துரைகள் தொடர்பில் பதிலளித்தவர்கள்[28] - பாடசாலை நூலகங்களில் பன்முகத்தன்மை கொண்ட பத்திரிகைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பத்திரிகை வாசிப்பை ஊக்குவிக்க முடியுமெனவும், நூலகப் பாடவேளையில் செய்திப் பத்திரிகை வாசிப்பிற்கென தனியான நேரம் ஒதுக்கப்பட வேண்டுமெனவும், இச்செயற்பாடு சகல பாடப் பிரிவினரிடமும் கட்டாயமாக்கப்படுகின்றபோது உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் பத்திரிகை வாசிப்பை ஊக்குவிக்க முடியுமெனவும் தெரிவித்தனர்.

---

[27] கேதீஸ்வரி, ஜீ. நூலகப் பொறுப்பாசிரியர், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சித்தன்கேணி, நேர்காணல்: 01.03.2019, நேரம்: 09.30.

[28] பவானி, நி. நூலகப் பொறுப்பாசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய், நேர்காணல்: 01.03.2019, நேரம்: 11.15.

அதேவேளை, உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் பத்திரிகை வாசிப்பை ஊக்குவிக்க வேண்டுமெனில் முதலில் செய்திப் பத்திரிகைகளுடைய முக்கியத்துவம் சார்ந்து ஆசிரியர்கள், மாணவர்களுடனான கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டுமெனவும், செய்திப் பத்திரிகைகளிற்கும் மாணவர்களிற்குமான ஊடாட்டத்தை அதிகரிக்க வேண்டுமெனவும், அதற்கு உயர்தர வகுப்பு மாணவர்கள் கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற தமது சுய ஆக்கங்களை எழுதி பத்திரிகைகளில் வெளியிடுவதை ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டுமெனவும், வாசிப்பு மாதத்தில் செய்திப் பத்திரிகை வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் செய்திப் பத்திரிகைகள் சார்ந்த போட்டிகளை நடாத்தும்போது மாணவர்கள் மத்தியில் பத்திரிகை வாசிப்பிற்கான ஆர்வத்தை ஏற்படுத்த முடியுமெனவும், இவை தவிர செய்திப் பத்திரிகைகளும் மாணவர்களின் கல்வி சார்ந்த விடயங்களோடு தொடர்புடைய இணைப்பிதழ்களை வழங்குவதோடு மாணவர்களை வாசிக்கத் தூண்டும் வகையில் மொழிநடைகளைக் கையாண்டு உள்ளடக்கங்களை அமைப்பதால் மாணவர்களிடத்தில் செய்திப் பத்திரிகை வாசிப்பினை ஊக்குவிக்க முடியும் எனவும் பொறுப்பாசிரியர்களால்[29] தெரிவிக்கப்பட்டது.

மேலும், மாணவர்கள் மத்தியில் இடம்பெற்ற குவிமையக் கலந்துரையாடலின்போது, பாடசாலை மட்டத்தில் செய்திப் பத்திரிகை வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குவதோடு அது தொடர்பில் ஆசிரியர்கள் எம்முடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டுமெனவும், அது மட்டுமல்லாமல் பெரும்பாலான மாணவர்கள், தங்களது பாடப் பரப்பிலுள்ள சுமையைக் குறைத்து, ஆசிரியர்கள் எம்மை பரீட்சையை நோக்கி தயார்படுத்துகின்ற மனப்பாங்கை விடுத்து, நூலகப் பாட நேரத்தில் தாம் நூலகத்திற்குச் சென்று வாசிப்பதை ஊக்குவிக்க வேண்டுமெனவும், தினமும் காலையில் பத்திரிகைகளை வாசித்து அவற்றில் வெளிவருகின்ற தகவல்களை வகுப்பில் தொகுத்துக் கூறும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், மற்றும் செய்திப் பத்திரிகைகள் அதன் உள்ளடக்கங்களை ஆக்கபூர்வமாகவும், எளிமையான மொழிநடையிலும் வெளியிடுவதன் மூலம் அவற்றை வாசிப்பதற்கான ஆர்வத்தினையும் ஏற்படுத்தப்பட முடியுமென மாணவர்களால் தெரிவிக்கப்பட்டது.

## 09. தொகுப்புரை

ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நான்கு பாடசாலை நூலகங்களிற்கும் குறிப்பேடுகளை வழங்கிப் பெறப்பட்ட எண்சார் தரவுகளின் பகுப்பாய்வு, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் குவிமையக் கலந்துரையாடல்கள் ஆகிய மூன்று முறையியல்களினதும் பகுப்பாய்வுகளின் பிரகாரம், ‘உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் காணப்படுகின்றது’ என்கின்ற முடிவே பெறப்பட்டது.

[29] வானதி, ப. நூலகப் பொறுப்பாசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, உடுவில், நேர்காணல்: 28.02.2019, நேரம்: 11.30.

உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் வாசிப்பிற்கான ஊடகத் தெரிவில், பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் குவிமையக் கலந்துரையாடல்கள் ஆகிய இரு முறையியல்களினதும் பகுப்பாய்வின் பிரகாரம், 'உயர்தர வகுப்பு மாணவர்கள் வாசிப்பதற்காக அச்சு ஊடகங்களைக் காட்டிலும் புதிய ஊடகங்களையே அதிகம் தெரிவுசெய்கின்றார்கள்' என்கின்ற முடிவே பெறப்பட்டது.

செய்திப் பத்திரிகை வாசிப்பதற்கான வாய்ப்புக்களாக, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் குவிமையக் கலந்துரையாடல்கள் ஆகிய இரு முறையியல்களினதும் பகுப்பாய்வுகளின் பிரகாரம், 'பன்முகத் தன்மை கொண்ட செய்திப் பத்திரிகைகளைக் கொள்வனவு செய்தல், நூலகப் பாடவேளை ஒதுக்கப்பட்டுள்ளமை, வாசிப்பு மாதத்தில் போட்டிகள் இடம்பெறுதல், செய்திப் பத்திரிகைகளுடன் தொடர்புடைய கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், வாசிப்பதற்கென மேலதிக நேரம் ஒதுக்குதல் மற்றும் முன்னைய செய்திப் பத்திரிகைகளைப் பாதுகாப்பாக வைத்து மாணவர்களின் கல்வித் தேவைகளுக்காக வழங்குதல்' ஆகியன செய்திப் பத்திரிகை வாசிப்பதற்கான வாய்ப்புக்களாக அடையாளப்படுத்தப்பட்டன.

செய்திப்பத்திரிகை வாசிப்பில் ஏற்படும் சவால்களாக, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் குவிமையக் கலந்துரையாடல்கள் ஆகிய இரு முறையியல்களினதும் பகுப்பாய்வுகளின் பிரகாரம், 'பாடசாலைகள் வாசிப்பை ஊக்கப்படுத்துவதற்குரிய நடடிக்கைகளை எடுக்கின்ற போதும் செய்திப் பத்திரிகை வாசிப்பை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகள் மிகக் குறைந்த அளவிலேயே இடம்பெறுகின்றமை, மாணவர்களுக்கு ஓய்வு நேரமின்மை, பாடச் சுமை, மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பரீட்சையை நோக்கிய செயற்பாடுகள், பாடம் சார்ந்த நூல்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றமை, பாடசாலைகளில் செய்திப் பத்திரிகைகளிற்கான தெரிவு குறைவு, புதிய ஊடகங்களின் பாவனை, காட்சி ரீதியான வாசிப்பு, நூலகங்களில் மாணவர்களின் செய்திப்பத்திரிகை வாசிப்பை ஊக்குவிப்பதற்கான வளங்கள் போதாமை, செய்திப்பத்திரிகை தவிர்ந்த ஏனைய அச்சுப் பதிப்பு ஊடகங்களை நாடல் மற்றும் செய்திப் பத்திரிகைகளின் உள்ளடக்கங்கள் மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது குறைவாக உள்ளமை' ஆகியன உயர்தர வகுப்பு மாணவர்களின் செய்திப்பத்திரிகை வாசிப்பில் ஏற்படும் சவால்களாக அடையாளப்படுத்தப்பட்டன.

செய்திப்பத்திரிகை வாசிப்பை ஊக்குவிப்பதற்கான பரிந்துரைகளாக, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் குவிமையக் கலந்துரையாடல்கள் ஆகிய இரு முறையியல்களினதும் பகுப்பாய்வுகளின் பிரகாரம், 'பன்முகத் தன்மை கொண்ட செய்திப்பத்திரிகைத் தெரிவுகள், நூலகப் பாடவேளையில் செய்திப்பத்திரிகை வாசிப்பதற்கென தனியான நேரம் ஒதுக்கி ஒவ்வொரு பாடப் பிரிவினருக்கும் கட்டாயமாக்குதல், செய்திப்பத்திரிகை வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் ஆசிரியர்கள், மாணவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளல், பாடசாலைச் செயற்பாடுகளில் செய்திப் பத்திரிகை வாசிப்பினை உள்ளடக்குதல், செய்திப்பத்திரிகை வாசிப்பு அணியினை அமைத்தல், வாசிப்பு மாதத்தில் பத்திரிகைகள் சார்ந்த போட்டிகளை நடாத்துதல், மாணவர்கள் செய்திப்பத்திரிகைகளிற்கு ஆக்கங்களை

எழுதுவதை ஆசிரியர்கள் ஊக்குவித்தல் மற்றும் செய்திப்பத்திரிகைகள் மாணவர்கள் வாசிக்கக்கூடிய வகையில் உள்ளடக்கங்களை வெளியிடுதல்' ஆகியன உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் செய்திப்பத்திரிகை வாசிப்பை ஊக்குவிப்பதற்கான காரணிகளாக அடையாளப்படுத்தப்பட்டன.

## உசாத்துணைகள்


**தமிழ்**

- இராஜேந்திரம்,து. (2014). *வாசிப்புப் பழக்கம் வாழ்வை மேம்படுத்தும்*, மா.கருணாநிதி கல்விச் சேவைப் பாராட்டு விழா மலர், கொழும்பு : குமரன் புத்தக இல்லம், பக். 97-100
- இராசரத்தினம், வடகோவை பூ.க. (2009, ஐப்பசி). *வாசித்தலைக் கைப்பற்ற வேண்டுமே தவிர கற்பிக்க முடியாது*, அகவிழி, கொழும்பு : சேமமடு பதிப்பகம், பக். 35-37.
- ஸ்ரீகாந்தலட்சுமி, அ. (2010, ஐப்பசி). *வளமான வாசிப்பு மானிடத்தின் மேம்பாடு*, அகவிழி, கொழும்பு : சேமமடு பதிப்பகம், பக். 14-21.
- ஆதித்தனார், சி.ப. (1971). *இதழாளர் கையேடு*, சென்னை : ராணிமுத்து, ப. 64.
- ஜோ ஆன்ட்ரூ, ச.ச. (1999). *தகவல் தொடர்பு சாதனங்களும் சமூகவளர்ச்சியும்*, சென்னை: தென்போஸ்கோ சமூகத்தொடர்பு கல்விமையம், ப. 27.
- யோகராசா, செ. (2005, ஐப்பசி). *சமகால வாசிப்பு: அதிர்வுகளும் அடுத்த காலடியும்*, அகவிழி, கொழும்பு : ரெக்னோ பிறின்ட், பக். 6-7.
- சுரேஸ் பால். (1999). *மீடியா உலகம்*, சிகா அச்சகம், சென்னை : தீபிகா, ப. 110.
- ரகுராம், எஸ். (2015). *அபிவிருத்தித் தொடர்பாடல் மாற்று நோக்கி*, கொழும்பு : சேமமடு பதிப்பகம், பக். 13,14.
- ரகுராம், எஸ். (2016, ஐப்பசி). *வாசிப்பு ஊக்குவிப்பில் ஊடகங்கள்*, ஆசிரியம், கொழும்பு : சிபிசி பிறஸ், பக். 17-18.

**ஆங்கிலம்**

1. Chauhan,P, Lal,P. (2012). *Imapct of Information Technology on Reading Habits of College Students*, International Journal of Research Review in Engineering Science and Technology, Vol.1, Issue.1.
2. Dollah,W.A.K.W., Fakeh,S.S.K.W., Kamal Rafedzi,E.R., Ibrahim,A., Rahim,H., Masron,M.Z.A & Ibrahim, M.R. (2017). *Inculcating Reading Habits among Secondary School Students*, Journal of Scientific and Engineering Research, Vol.4, Issue. 8.
3. Loan, F.A. (2011). *Reading and Library Usage Habits of the College Students*, International Journal of Information Research, Vol.1, No.1.